SOFA-I-M

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - ஆறு - __________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 5 × 1 = 5

1. மாணவர்கள் நூல்களை ________________ கற்க வேண்டும்.

   அ) மேலோட்டமாக ஆ) மாசற இ) மயக்கமற

2. மாணவர்கள் பிறர் ________________ நடக்கக் கூடாது.

   அ) தூற்றும் படி ஆ) பார்க்கும் படி இ) வியக்கும் படி

3. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம்.

   அ) வழி தெரியவில்லை ஆ) பேருந்து வசதி இல்லை

   இ) ஊரில் பள்ளிக் கூடம் இல்லை

4. தவறான சொல்லை எடுத்து எழுதுக.

   அ) கண்டான் ஆ) வென்ரான் இ) நண்டு

5. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம் பெறாத சொல் எது?

   அ) மஞ்சள் ஆ) தம்பி இ) கல்வி

**ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.** 4 × 1 = 4

1. மாசு + அற 2. மானம் + இல்லா 3. காடு + ஆறு

4. சிறப்பு + உடையார்

**இ ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** 4 × 1 = 4

1. குற்றமில்லாதவர் 2. கைப்பொருள் 3. பசியின்றி

4. படிப்பறிவு

**II. அ) எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** 4 × 2 = 8

1. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?
2. நாம் யாருடன் சேரக் கூடாது?
3. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?
4. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?
5. எதை நம்பி வாழக் கூடாது?

**ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

1. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?
2. நாம் எவ்வாறு வாழ வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?
3. காமராசரின் மதிய உணவுத் திட்டம் குறித்து எழுதுக.
4. இன எழுத்துகள் என்றால் என்ன?

**இ) மனப்பாடப் பாடல்.** 4

1. 'மன்னனும்' எனத் தொடங்கும் 'மூதுரை' பாடலை அடிமாறாமல் எழுதுக.

III. **அ) ஒற்றுப்பிழைகளைத் திருத்தி எழுதுக.** 2

1. திரைபடம் காண வருக 2. போர்களம் சென்று வாகைசூடு

**ஆ) பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.** 2

1. தெண்றல் 2. கன்டம் 3. நன்ரி 4. மன்டபம்

**இ) ஒரு சொல் - இரு பொருள் தரும் படி எழுதுக.** 2

1. சிறுவர், சிறுமியர் ________________ பொழுதை ஓடியாடிக் களிக்க வேண்டும்.
மலர்களால் கட்டிய ________________ தருணத்திற்கேற்ப விலை மாறும்.
(மலை, மாலை)

**ஈ) சொற்றொடர் அமைக்க.** 4

1. வகுப்பு 2. உயர்கல்வி

**உ) கலைச்சொல் தருக.** 4

1. Education 2. Library 3. E-Books 4. E-Magazine

**ஊ) கீழ்க்காணும் தொடர்களை உரிய இனஎழுத்துச் சொற்களை எடுத்து எழுதி நிரப்புக.** 2

(பஞ்சு, தென்றல், தந்தம், தங்கம், நண்டு)

1. யானையிடம் உள்ளது ________________
2. மெத்தையினுள் இருப்பது ________________
3. குளிர்ந்த காற்று ________________
4. வளையில் இருப்பது ________________